தலைப்பு 272 - குருணாகல் மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 272 – குருணாகல் மாவட்ட செயலகத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குருணாகல் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே மாதம் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே மாதம் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, குருணாகல் மாவட்ட செயலகத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் குருணாகல் மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை குருணாகல் மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும்

பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத்

தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	ஆய்வுக்குட்படுத்தப்பட்ட வருடத்தில், பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ், சனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற நிதியைக் கொண்டு, 06 பிரதேச செயலகங்களில் முடிக்கப்பட்ட ரூபா 4,815,600 பெறுமதியான "நில செவன" நிர்மாணப் பணிகள் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கீழ் கணக்கீடு செய்யப்படவில்லை.	செலவுத் தலைப்புக்கு ஏற்புடையதாக சம்பந்தப்பட்ட சனாதிபதி செயலகத்திடம் இருந்து அனுமதி பெறப்பட்ட பின்னர், 272 ஆம் தலைப்பின் கீழ் சொத்தாக கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அரச கணக்கு வழிகாட்டலின்படி வேலைகள் நிறைவடைந்து-ள்ளதால் "நில செவன" பெறுமதி கணக்கிடப்படுதல் வேண்டும்.
(ஆ)	மஹவ பிரதேச செயலக வளாகத்தில் அமைந்திருந்த சிதைவுற்று இருந்த உத்தியோகபூர்வ இல்லம், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2023 ஆம் ஆண்டில் ரூபா 10,788,960 நிதியொதுக்கீட்டின் கீழ் புதிதாக	நிதி ஒதுக்கீடு 130 ஆவது செலவுத் தலைப்பின் கீழ் பெறப்பட்டுள்ளதுடன், 272 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் இந்த பெறுமதியைக் கணக்கிடுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் தேவையான	பெறுமதி அதிகரித்துள்ளதால், மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்படுதல் வேண்டும்.

நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட போதிலும், மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வருடத்தில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த இவ்வறிக்கையில் 3.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை

3. நிதி மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

அவதானிப்புக்கள்			பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணங்காமை**		
(அ)	2020 செப்தெம்பர் 18 ஆம் திகதியிடப்பட்ட 16/2020 ஆம் இலக்க உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ பொது அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி	பிரதேச செயலாளர்கள் குறைந்தபட்சம் 04 மாதங்களுக்கு ஒரு முறையாவது சகல கிராம அலுவலர் அலுவலகங்களையும் உள்ளடக்கும் வகையில் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டிய போதிலும், 20 பிரதேச செயலகங்களின் கிராம அலுவலர் அலுவலகங்கள் அவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்-கவில்லை.	மாதாந்தம் நிர்ணயிக்கப்பட்ட கிராம அலுவலர் அலுவலகங்களின் எண்ணிக்கையைப் பரிசோதனை செய்வதற்கு சாத்தியமான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகமும் உள்ளடங்கும் வகையில் பரிசோதனை செய்வதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ)	2022 திசெம்பர் 14 ஆம் திகதியிடப்பட்ட 2310/29 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை விதிகளின் தொகுதி 01 இல் உள்ள XVIII ஆம் அத்தியாயத்தின் 251 ஆம் பிரிவு	26 பிரதேச செயலகங்களில், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஒரே சேவை நிலையத்தில் 05 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த இணைந்த சேவையில் 222 அலுவலர்கள், 72 கிராம சேவை அலுவலர்கள் மற்றும் 338 அபிவிருத்தி அலுவலர்கள் தொடர்பில் இடமாற்ற நடைமுறை திட்டம் அமுல்படுத்தப்படவில்லை.	கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், தற்போது 05 வருடங்களை பூர்த்தி செய்த அதிக எண்ணிக்கையான அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், மிகுதி அலுவலர்களுக்கும் கட்டம் கட்டமாக எதிர்காலத்தில் இடமாற்றங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நடைமுறை விதிகளின் பிரகாரம் அலுவலர்களை இடமாற்றம் செய்வதற்கு ஒரு வேலைத்திட்டத்தை தயாரித்து அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவில், 2013 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அம்பன்பொல நீர் திட்டம், 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட இல. 425 கட்டுப்பொத்த மற்றும் இல. 406 கட்டுப்பொத்த யுனிட் 03 நீர் திட்டங்கள் மற்றும் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் அமுல்படுத்தப்பட்ட வெல்கல இரவு/பகல் விளையாட்டு மைதான அபிவிருத்திப் பணிகள் என்பவற்றுக்காக முறையே ரூபா. 3,774,418, ரூபா.3,854,128 மற்றும் ரூபா.947,746 செலவிடப்பட்ட போதிலும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு முடிவடையும் வரையிலும் அந்த திட்டங்கள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	அம்பன்பொல நீர் திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளதுடன், கட்டுப்பொத்த - யுனிட் 03 ஆகிய இரண்டு திட்டங்களும் நிறைவு செய்யப்படாத நிலையில் உள்ளன. தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தினால் தற்போது அதன் ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. வெல்கல இரவு/பகல் விளையாட்டு மைதானத்தின் குறைபாடுகளை 02 வாரங்களுக்குள் நிவர்த்தி செய்யுமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது	திட்டங்களை விரைவாக முடித்து மக்களின் பாவனைக்காக கையளித்து எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு வேலைத் திட்டத்தை தயாரித்து அமுல்படுத்தல் வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், கிரிபாவ பிரதேச செயலகத்தினால் பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ரூபா. 483,582 செலவில் அமாதஹர நீர்ச் சங்கத்தின் நீரேற்று நிலையம் மற்றும் மோட்டார் திருத்தப்பட்ட போதிலும், திருத்தப்பட்ட மோட்டாரை பொருத்தி, நீர்த்தாங்கியை அமைத்து, நீரேற்று நிலையத்திற்கு நீரைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமையினால் எதிர்பார்க்கப்பட்ட விளைவைப் பெற முடியாமல் போயுள்ளது.	சனசமூக அடிப்படையிலான அமைப்பு நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்து வருவதுடன், நிதி கிடைத்தவுடன் பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப அலுவலரின் மேற்பார்வையின் கீழ் மிகுதி வேலைகளை நிறைவு செய்து, சமூகம் நன்மையடையும் வகையில் திட்டத்தை முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	முறையான ஒரு வேலைத்திட்டத்தை ஏற்படுத்தி, எதிர்பார்க்கப்பட்ட விளைவைப் பெற்றுக்கொள்ளக்-கூடிய நிலைக்குக் கொண்டுவந்து திட்டங்களை நிறைவு செய்யப்படுதல் வேண்டும்.
(ஆ)	2021 ஆம் ஆண்டில் கிராமிய விளையாட்டு மைதான அபிவிருத்திக்காக கிடைக்கப்பெற்ற ரூபா. 1,470,000 நிதியையும், இப்பகமுவ பிரதேச சபையிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா. 1,016,047 நிதியையும் பயன்படுத்தி மொத்தமாக ரூபா. 2,486,047 செலவில் கனேவத்த பிரதேச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானம் பாவனையின்றி இருந்தது.	இந்த குறைவான பயன்பாட்டு நிலைமை குறித்து உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	தேவையைச் சரியாக இனங்காணாத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்தலும், திட்டத்தின் மூலம் அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்-வதற்காக ஒரு வேலைத்திட்டத்தை தயாரிப்பதும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
(இ)	2021 ஆம் ஆண்டில் பாரம்பரிய மற்றும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ், கனேவத்த பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஒரு கிராமிய அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூபா. 4,698,496 செலவில் திருத்தியமைக்கப்பட்டு வழங்கிய பொது வசதிகள் நிலையம் மற்றும் வழங்கப்பட்ட உபகரணங்கள் பாவனையின்றி இருந்தன.	2008 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தினால் பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நிலையம் குறைவான பயன்பாட்டுடனேயே காணப்படுதல்.	பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களை நியமித்து, சமூகத்தின் தேவைகளுக்கு அமைய திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களின் மூலம் அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ)	குருணாகல் மாவட்டத்தில் பலாப்பழ (Breadfruit) செய்கையை பிரபலப்படுத்துவதற்கும் விற்பனைக்காகவும் 2023 ஆம் ஆண்டில் மாஸ்பொத்த பிரதேச செயலகப் பிரிவின் ஒல்கமுவ கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒரு பயனாளியிடம் வழங்கப்பட்ட ரூபா. 324,500 பெறுமதியான இலத்திரனியல் தராசு, சிறியளவிலான நீரிழப்பு இயந்திரம் (Dehydrator), பொலித்தீன் சீலர் மற்றும் நடுத்தர அளவிலான மா அரைக்கும் இயந்திரம் ஆகியவை பாவனையின்றி செயலற்றுக் காணப்பட்டன.	உற்பத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட சலுகைக் காலத்தின் பின்னரும் அவர் அந்த இயந்திரங்களைக் கொண்டு உரிய உற்பத்தியைச் செய்யாவிட்டால், அந்த உபகரணங்களை பொருத்தமான வேறொரு தொழில் முயற்சியாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	திட்டங்கள் குறித்துப் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத அலுவலர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதும், அத்துடன் செயலற்ற சொத்துக்களை பொருத்தமான தொழில்-முயற்சியாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பதும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.3 திட்டங்களை நிறைவு செய்யாமல் கைவிடுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2014 ஆம் ஆண்டு தெயட்ட கிருள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பமுணாகொட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட 02 நீர் விநியோக குழாய் நீடிப்புத் திட்டங்களுக்காக ரூபா. 14,373,885 தொகையை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்திய போதிலும், மீளாய்வுக்குட்பட்ட வருடத்திற்கு 10 வருடங்களுக்கு மேலாக காலம் கடந்துள்ள நிலையில், அந்தத் திட்டங்கள் அமுல்படுத்தப்படாததன் காரணமாக செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவாக காணப்பட்டது.	களுகமுவ கொன்னவ பாலம் வரை ஏற்கனவே பதிக்கப்பட்டுள்ள குழாய்களைப் பயன்படுத்தி, அதில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2024 திசெம்பரில் அறிவித்துள்ளதுடன், அந்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஊடாக முழுமையான அறிக்கை பெற்று சமர்ப்பிக்கப்படும் எனவும் அறியப்படுகிறது.	முறையானதொரு விசாரணையை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் அல்லது தரப்பினர் மீது நடவடிக்கை எடுப்பதும், அத்துடன் துரிதமான வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்தி திட்டத்தின் நன்மைகளை சமூகத்திற்குப் பெற்றுக்கொடுப்பதும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 180 நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை வெளியிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த செயலாற்றல் அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	செயலாற்றுகை அறிக்கை செயற்றிட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகள் செயலாற்றுகை அறிக்கையின் மூலம் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை.	வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பிக்கும்போது, அது செயற்றிட்டத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், செயலாற்றுகை அறிக்கைக்கு அங்கீகரிக்கப்பட்ட படிவத்தின் அடிப்படையிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	செயலாற்றுகை அறிக்கை செயற்றிட்டத்திற்கு (செயல் திட்டத்திற்கு) இணங்கத் தயாரிக்கப்பட வேண்டும்..
(ஆ)	செயலாற்றுகை அறிக்கையின் 3.8 ஆம் பந்தியின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மூன்று குறியீடுகளுடன் (Codes) தொடர்புடைய சொத்துக்கள் மட்டுமே காட்டப்பட்டிருந்ததுடன், மிகுதி நான்கு குறியீடுகளுடன் தொடர்பான சொத்துக்கள் இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், பிரதேச செயலகங்களில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் காணப்படுவதால், அந்தச் சொத்துக்களை குறியீட்டு இல. 9180 இன் கீழ் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	சொத்துக் குறியீட்டு இல. 9180 இன் கீழ் பிரதேச செயலகங்களில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டாலும், அந்தச் சொத்துக்களின் உரிமையை இதுவரையில் பொறுப்பேற்காததால் பெறுமதியை மதிப்பிட முடியவில்லை.	சொத்து உரிமையைப் பொறுப்பேற்று சரியான மதிப்பீட்டுப் பெறுமதிகளைப் பெற்று, சொத்துக் குறியீட்டு இலக்கங்களுக்கு அமையக் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.5 உள்நாட்டு நிதிகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கிராமிய வீதி அபிவிருத்தி - 2024 இன் கீழ், இந்தத் திட்டத்தின் பொருட்டு மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் நிதி ஒதுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ரூபா. 15,250,000 பெறுமதியான 16 திட்டங்கள் உரிய வருட காலப்பகுதிக்குள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மக்கள் பிரதிநிதிகளால் முன்மொழிவுகளை அமைச்சுக்குச் சமர்ப்பிக்க எடுத்துக்கொண்ட காலத்தின் காரணமாக உரிய முன்மொழிவுகளை அங்கீகரிப்பதில் ஏற்பட்ட தாமதம், நிதி ஒதுக்கப்பட்டு அமுல்படுத்துவதற்குப் போதுமான நேரம் இல்லாமை மற்றும் நிலவிய சீரற்ற காலநிலை அத்துடன் 2024 சனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டமை ஆகிய காரணங்களினால் 16 திட்டங்களை நிறைவு செய்ய முடியவில்லை.	முறையானதொரு விசாரணையை மேற்கொண்டு, திட்டங்களை அமுல்படுத்த தவறிய பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், அத்துடன் எதிர்காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்களை தாமதமின்றி அமுல்படுத்துவதற்காக ஒரு வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	பிரதேச அபிவிருத்தி - 2024 இன் கீழ் பிரதேச வேறுபாடுகளைக் குறைக்கக்கூடிய வகையில் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூபா. 95,070,000 இலிருந்து சமூக நிறுவனங்களுக்குப் பொருட்களை விநியோகிப்பதற்காக மாத்திரம் ரூபா. 46,345,000 அதாவது, மொத்த நிதி ஒதுக்கீட்டில் 49 சதவீதம் ஒதுக்கப்பட்டதன் காரணமாக, திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.	பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திட்டங்களைத் தெரிவுசெய்தல் மாவட்ட அல்லது பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படாததால், பொருட்கள் கொள்வனவு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக சனாதிபதி செலவுத் தலைப்பின் கீழ் மாவட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவுகள் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டுள்ளன.	முறையான வகையில் திட்டங்களை இனங்காண தவறியமை தொடர்பாக ஒரு விசாரணையை மேற்கொள்வதற்கும், அத்துடன் பிரதேச வேறுபாடுகளைக் குறைக்கக்கூடிய வகையில் திட்டங்களை திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கும் ஒரு வேலைத்திட்டத்தை தயாரிக்கப்படுதல் வேண்டும்.

4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்தினால் 2021 திசெம்பர் 29 ஆம் திகதி விலைமனுக்கள் கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தரிடமிருந்து ரூபா. 5,404,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 20 பல்நோக்கு நறுக்கும் இயந்திரங்கள் (Multi Chopper Machines) மீளாய்வுக்குட்பட்ட வருடம் முழுவதும் பாவனையின்றி செயலற்றுக் காணப்பட்டன.	தற்போது வணிக ரீதியில் பால் மாடுகளை வளர்க்கும் பால் பண்ணையாளர்க-ளுக்குத் தேவையான கால்நடைகளின் உணவு உற்பத்திக்காக இந்த பல்நோக்கு நறுக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துடன் கலந்துரையாடப்படுகின்றது.	திட்டமிடல் இன்றி சொத்துக்களைக் கொள்வனவு செய்த அலுவலர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுப்பதும், அத்துடன் செயலற்ற சொத்துக்களை திட்டமிட்ட வகையில் வினைத்திறனான பணிகளில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
(ஆ)	06 பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளு-க்காக மீளாய்வுக்குட்பட்ட வருடம் முடிவடையும் போது 10 வருடங்கள் முதல் 61 வருடங்கள் வரை காலம் கடந்திருந்தபோதிலும், அந்தக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்கவில்லை	கையகப்படுத்தும் நடவடி-க்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருதல்	காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவாக நிறைவு செய்யப்படுதல் வேண்டும்.
(இ)	09 பிரதேச செயலகங்களின் 23 வாகனங்கள் மீளாய்வுக்குட்பட்ட வருடம் முடிவடையும் போது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.	வினைத்திறனாக சேவைகளை வழங்குவதற்குப் பயன்படு-த்தப்படாத பவுசர் வாகனங்களை வினைத்திற-னாக சேவையில் ஈடுபடுத்தக்கூடிய உள்ளூராட்சி மன்றங்க-ளுக்கு வழங்குவது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் அதற்கான பதில் கிடைக்கவில்லை.	வாகனங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தல் வேண்டும்.

(ஈ)	மாவட்டச் செயலாளருக்குச் சொந்தமான பதிவு உரிமையை இரத்து செய்யப்படாத ஒரு டபிள் கெப் வண்டி (Double Cab) மற்றும் 6 மோட்டார் சைக்கிள்கள் 2020 பெப்ரவரி 05 ஆம் திகதி விலைமனுக்கள் கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் 03 ஆம் திகதி 4 மோட்டார் சைக்கிள்கள் வடமேல் மாகாண தொழில்நுட்பக் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்களின் பதிவு உரிமை மீளாய்வுக்குட்பட்ட வருடம் முடிவடையும் திகதியிலும் கூட குருணாகல் மாவட்டச் செயலாளரிடமே காணப்பட்டது.	ஒரு வாகனத்தின் பதிவை இரத்து செய்வதற்கான உரிய படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும், பதிவை இரத்து செய்ததாக அறிவிக்கப்படவில்லை எனவும், 6 வாகனங்களுக்கான M.T.A. 6 படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கொள்வனவாளரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், 04 வாகனங்களின் பதிவு இரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை எனவும் அறியப்படுகிறது.	உரிமை மாற்றங்களை உரியவாறு நிறைவு செய்வதற்குப் பொறுப்புள்ள அலுவலர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(உ)	குருணாகல் பிரதேசத்தில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடம், மாளிகாபிட்டிய, பொதுச் சந்தை, மயானம், காணிப் பதிவாளர் அலுவலக காணி, ரஜபிஹில்ல வாடிவீடு, ரஜபிஹில்ல பூங்கா, மாநகர சபை வளாகக் காணி, மெகசின் ஹில் காணி உட்பட அதிக வர்த்தக பெறுமதியுடைய 28 காணிகள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் நகரசபைக்கு வழங்கப்பட்டு அரசாங்கத்திற்கு பாரிய வருமானம் ஈட்டக்கூடியதாக இருந்தபோதிலும், அவை குருணாகல் மாநகர சபையிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் காணப்பட்டது.	நகர சபைக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	காணிகளை சட்டபூர்வமாக நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஊ)	குருணாகல் மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலகப் பிரிவுகளிலும், 64 கிராம அலுவலர் பிரிவுகளிலும் அமைந்துள்ள 60.19 ஹெக்டேயர் காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் பாவனையின்றி செயலற்றுக் காணப்பட்டன.	மஹவ, இப்பாகமுவ, நிகவெரட்டிய, ரிதீகம, குளியாப்பிட்டிய, பண்டு/மேற்கு, கொபேகனை, வாரியப்பொல, கிரிபாவ, உடுபத்தாவ, வீரம்புகெதர, கொட்டவெஹர ஆகிய பிரதேச செயலகங்களில் 52 சொத்துக்கள் செயலற்றுக் காணப்படுகின்றன.	காணிகளை சட்டபூர்வமாக நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்கோ பயனுள்ள பொருளாதார நன்மைகளைப் பெறக்கூடிய வேறு ஒரு திட்டத்தில் ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கனேவத்த பிரதேச செயலகப் பிரிவில் பொத்துவில் கிராம அலுவலர் பிரிவிலுள்ள மஹகல்மட எகொட என்ற கிராமத்தில் அமைந்துள்ள 30.704 ஹெக்டேயர் (75 பரப்பு) காணி, 1999 சனவரி 18 ஆம் திகதி 30 வருட காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட விவசாய நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதுடன், மட்டுப்படுத்தப்பட்ட விவசாய நிறுவனத்திற்கு அரிசி மற்றும் மா உற்பத்தி, விதை நெல் பதப்படுத்தல், மரக்கறி மற்றும் பழங்களை நீரிழத்தல் (Dehydration) மற்றும் நெல் கொள்வனவு களஞ்சிய வசதிகள் கொண்ட விவசாய உற்பத்திப் பதப்படுத்தல் முன்னோடித் திட்டமொன்றை அமுல்படுத்தும் நோக்குடன் 1999 ஆம் ஆண்டு முதல் பல்வேறு சந்தர்ப்பங்களில் தேசிய சவிய “கம நெகும“ திட்டத்தின் கீழ் ரூபா. 17,383,481 பெறுமதியான பணம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், முதலீட்டுச் சபையினால் கையளிக்கப்பட்டுள்ள ரூபா. 555,618,000 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ரூபா. 37,621,110 பணம், மற்றும் விவசாய சுழல் கடனாக ரூபா. 3,000,000 உட்பட மொத்தம் ரூபா. 113,622,591 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், தற்போது வரை இந்த நோக்கங்களில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.	காணியை நன்கு அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வரையறுக்கப்பட்ட ஹிரியால கோவிஜன கம்பெனியின் (Ltd. Hiriyala Govijana Company) தலைவருக்கு 2024 நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 06 மாதங்களுக்குள் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளை மேற்கொள்ளாவிட்டால் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் குத்தகையை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என காணி ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.	அடைய வேண்டிய இலக்குகள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத அலுவலர்கள் மீது முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், அத்துடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறாவிட்டால் குத்தகையை இரத்து செய்து, நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	மாவட்டச் செயலாளரால் விவசாய சுழற்சி கடன் நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூபா. 3,000,000 கடன்தொகையில், மீளாய்வுக்குட்பட்ட வருடம் முடிவில் மேலும் ரூபா. 1,975,000 நிலுவையாக அறவிடப்பட வேண்டியிருந்தது.	இதுவரையில் அந்தக் கடன்தொகை தீர்க்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை.	கடன் தொகைகளை கால தாமதமின்றி அறவிடுவதற்குப் பொறுப்புள்ள அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(இ)	அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 454 ஆம் அதிகாரத்தின் பிரகாரமும், குத்தகை ஒப்பந்தத்தின் 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரமும் மாவட்டச் செயலாளர் மற்றும் காணி ஆணையாளரின் முன் அனுமதியின்றி உப குத்தகை வழங்குவதோ அல்லது இடைப்பட்ட குத்தகை மேற்கொள்வதற்கு முடியாது என்ற போதிலும், 2022 மே 22 ஆம் திகதி முதல் 2026 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையான 5 வருட காலப்பகுதிக்கு, முதல் மற்றும் இரண்டாம் வருடங்களில் மாதந்தோறும் ரூபா. 400,000 என்ற வகையிலும், மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் ரூபா. 420,000 என்ற வகையிலும், ஐந்தாம் வருடத்தில் ரூபா. 540,000 என்ற வகையிலும் அறவிடும் நிபந்தனையின் அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றுக்கு உப குத்தகை வழங்கப்பட்டதன் காரணமாக அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டுள்ளது.	அந்த உப குத்தகையை சட்டரீதியாக்குவது தொடர்பான ஆவணங்கள் காணி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி உப குத்தகைகள் சட்டரீதியாக்கப்பட்டதன் பின்னரும், அத்துடன் அந்தக் குத்தகை பணத்தை அறவிடும் முறை தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து ஆலோசனை கிடைத்தவுடனும், அந்தப் பணம் அறவிடப்படும்.	குத்தகை ஒப்பந்தத்தை மீறியமை தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க தவறிய அலுவலர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதும், அத்துடன் துரிதமாக சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
(ஈ)	விவசாய நிறுவனமானது தமது குத்தகை உரிமையை அடமானம் வைத்து பிரதேச அபிவிருத்தி வங்கியிலிருந்து 4 சந்தர்ப்பங்களில் ரூபா. 27,844,800 கடன்தொகையைப் பெற்றுள்ளது. இந்தக் கடனைச் செலுத்த தவறியதன் காரணமாக தண்டப்பணம் மற்றும் வட்டியாக ரூபா. 68,866,556 ஐ வங்கிக்கு செலுத்த இரண்டு தரப்பினரும் 2022 திசெம்பர் 29 ஆம் திகதி இணக்கப்பாடு கண்டிருந்த போதிலும், அந்த இணக்கப்பாட்டின்படி செயற்படாமையினாலும், அத்துடன் நிறுவனம் தொடர்ச்சியாக நட்டமடைந்து வரும் நிலையினாலும், ரூபா. 113,622,591 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் சொத்துக்கள் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு இழக்கப்படும் அபாயம் காணப்பட்ட போதிலும், இது சம்பந்தமாக அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்தக் காணியில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படாவிட்டால் மற்றும் தொடர்ந்தும் குத்தகை ஒப்பந்தத்தின் ஏனைய நிபந்தனைகளை மீறும் வகையில் செயற்பட்டால், குத்தகையை இரத்து செய்வது தொடர்பான பரிந்துரை அறிக்கைகள் காணி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படும்.	குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளை அடமானம் வைத்தல் தொடர்பாக அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் செயற்படாத அலுவலர்கள் மீது முறையான நடவடிக்கை எடுப்பதும், அத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு எதிராக துரிதமாக சட்ட நடவடிக்கை எடுப்பதும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.8 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஒவ்வொரு அரச நிறுவனமும் தமது காணிச் சொத்துக்களின் பெயர், அமைவிடம், பெறுமதி, நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஒரு ஆவணத்தைப் பேணுதல் வேண்டும். இருப்பினும், அத்தகைய ஆவணம் குருணாகல் பிரதேச செயலகத்திடம் இல்லாததன் காரணமாக, குருணாகல் நகரைச் சுற்றியுள்ள 04 பிரிவுகளில் உள்ள காணிப் பகுதிகள் பல வருடங்களாக அத்துமீறிய கட்டுமானங்களுக்கு உள்ளாகியுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், அந்தக் காணிகளை அரசாங்கக் காணி (உரிமையைத் திரும்பப் பெறுதல்) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அது சம்பந்தமாக களப் பரிசோதனைகளை மேற்கொண்டு தீர்மானம் எடுப்பதாகவும், மேலும் இவர்கள் அனைவருக்கும் அடுக்குமாடி வீட்டுத் திட்டமொன்றை வில்கொட-வில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கடந்த ஒருங்கிணைப்புக் குழுவில் அறிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.	தமது காணிச் சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு ஆவணத்தைப் பேண வேண்டும் என்பது-டன், அத்துமீறிய கட்டுமானங்கள் தொடர்பாக துரித-மாக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	சரியான தொடர்பாடல் மற்றும் பொருத்தமான பொறிமுறை (Mechanism) இன்மை காரணமாக, 9 பிரதேச செயலகங்களில் 2024 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரைக்கான சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவுப் பணத்தில் ரூபா. 13,098,200 மேலதிகமாக அறவிடப்பட்டுள்ளது	சுற்றறிக்கையின்படி கொடுப்பனவுகள் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதி முதல் 7 வேலை நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், குறித்த நாட்களில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நிதி ஏற்பாடுகள் கிடைக்கப்-பெறாமையினால், ஒரு குறிப்பிட்ட திகதியை பயனாளிகளுக்கு அறிவிக்க முடியாமல் போனதால் மேலதிகமாக அறவிடல்கள் ஏற்படுகின்றன.	சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவுகளை உரியவாறு வழங்க நடவடிக்கை எடுக்காத அலுவல-ர்கள் மீது நடவடிக்கை எடுப்ப-தற்கும், அத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கொடுப்பனவுகள் காலக்கிரமப்படி கிடைப்பதை உறுதிப்படுத்தும் முறைமையொன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(இ)	725 இளைப்பாறிய அலுவலர்களுக்கு மீளாய்வுக்குட்பட்ட வருட முடிவில் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா. 167,196,792 ஓய்வூதிய தொகையில், மீளாய்வுக்குட்பட்ட வருட இறுதித் திகதியில் ரூபா. 105,206,932 அறவிடப்பட்டிருந்ததுடன், மேலும் ரூபா. 84,576,516 அறவிடப்பட வேண்டியிருந்தது.	குருணாகல் மாவட்டத்தில் உள்ள 30 பிரதேச செயலகங்களில் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியத் தொகை அறவிடப்பட்டு வருவதுடன், மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா. 84,576,516 ஆகும்.	முறையானதொரு விசாரணையை மேற்கொண்டு, மேலதிக கொடுப்பனவுகளை அலுவலர்களின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டதா என்பதைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், அத்துடன் மேலதிக கொடுப்பனவுகளை துரிதமாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	12 பிரதேச செயலகங்களில் 16 இளைப்பாறியவர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியம், மீள அறவிடுவதற்கு முன்னர் அந்த இளைப்பாறியவர்கள் மரணமடைந்தமையினால், மீளாய்வுக்குட்பட்ட வருடம் முடிவடையும் போது அறவிடப்பட முடியாமல் உள்ள ரூபா. 3,217,115 ஓய்வூதிய நிலுவையை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேலதிக நடவடிக்கைகள் குறித்து அறிவதற்காக ஓய்வூதிய திணைக்களத்திடம் வினவப்பட்ட போதிலும், இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை.	முறையானதொரு விசாரணையை மேற்கொண்டு, மேலதிக கொடுப்பனவுகளை அலுவலர்களின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டதா என்பதைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், அத்துடன் மேலதிக கொடுப்பனவுகளை துரிதமாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(உ)	பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2024 மார்ச் 30 ஆந் திகதிய 06/2024(i) மற்றும் 2024 யூலை 17 ஆந் திகதிய 06/2024(ii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டம், பரவலாக்கப்பட்ட நிதி மற்றும் பொருத்தமானவாறு “கந்துகர	பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2024 மார்ச் 28 ஆந் திகதிய 06/2024, 2024 மார்ச் 30 ஆந் திகதிய 06/2024(i) மற்றும் 2024 யூலை 17 ஆந் திகதிய	சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசாரித்து, முறையானதொரு விசாரணையை மேற்கொண்டு, மேலதிக கொடுப்பனவு ஏதும் வழங்கப்பட்டிருந்தால், அதனைத்

தசகய" (மலைநாட்டு தசாப்தம்), விவசாய புத்தாக்க நிகழ்ச்சித்திட்டம் போன்ற ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்-திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் மீளாய்வுக்-குட்பட்ட வருடத்தினுள் ரூபா. 15,000 ஊக்குவிப்புக் கொடுப்பனவு பெற்றுக்கொண்டிருக்கையில், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் 2014 சனவரி 21 ஆந் திகதி வெளியிடப்பட்ட EST/8ALLOW/03/121 இலக்க கடிதத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் கிராமிய மட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் ஒருங்கிணைத்து கண்காணித்தமைக்காக 2024 மார்ச் மாதம் முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய கொடுப்பனவாக மொத்தம் ரூபா. 1,376,919 ஐ 30 உத்தியோகத்தர்கள் மேலதிகமாகப் பெற்றுள்ளனர்.	06/2024(ii) ஆம் இலக்கக் கடிதங்கள் மூலம், 2014 சனவரி 21 ஆந் திகதிய EST/8/ALLOW/03/121 இலக்க கடிதம் இரத்து செய்யப்படவில்லை.	திரும்ப அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக குருணாகல் மாவட்டச் செயலகத்தினால் ஒரு முறையான உத்தேச மூலோபாயத் திட்டம் (Strategic Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ஒவ்வொரு வருடமும் பிரிவுகளால் வழங்கப்படும் செயற்திறன் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி செயற்திறன் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.	கிடைக்கப்பெறும் நிதி ஏற்பாடுகளின் அளவு குறித்து முன்கூட்டியே தீர்மானிக்க முடியாத காரணத்தினால், வரவிருக்கும் வருடங்-களுக்குரிய திட்டம் தயாரிக்கப்படவில்லை.	2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் நிலை-பேறான அபிவிருத்தி இலக்குகளை அடை-வதற்கான நோக்குடன் நடவடிக்கை எடுக்க-ப்படுதல் வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் திசெம்பர் 31 ஆந் திகதியன்று, சிரேஷ்ட மட்டத்தில் 13 பதவிகளும், மூன்றாம் நிலை மட்டத்தில் 3 பதவிகளும், ஆரம்ப நிலை மட்டத்தில் 16 பதவிகளும் என மொத்தமாக 32 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. அத்துடன், இரண்டாம் நிலை மட்டத்தில் 86 ஊழியர்கள் மேலதிகமாக இருந்தனர். வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை வெற்றிடங்கள் உள்ள இடங்களுக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சிரேஷ்ட மட்டத்தில் 13 பதவிகளும், மூன்றாம் நிலை மட்டத்தில் 03 பதவிகளும், ஆரம்ப நிலை மட்டத்தில் 16 பதவிகளும் என மொத்தமாக 32 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்படுவதுடன், இரண்டாம் நிலை உத்தியோகத்தர்களில் 86 பேரின் மேலதிகம் காணப்படுகின்றது.	முறையான வகையில் ஒரு பதவியணி மீளாய்வை மேற்கொண்டு வெற்றிடப் பதவிகளை நிரப்பு-வதற்கும், அத்துடன் மேலதிக உத்தியோக-த்தர்களை வெற்றிட-ங்கள் காணப்படும் இடங்களுக்கு இணைப்ப-தற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.